செ.வெ.எண்.74 நாள்.28.09.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் பயனாளிகள் தேர்வு தொடர்பான கிராம நிலைக்குழு அலுவலர்களுக்கான கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், திருநெல்வேலி மாவட்டத்தில் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் பயனாளிகள் தேர்வு தொடர்பான கிராம நிலைக்குழு அலுவலர்களுக்கான கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.09.2017) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது-

ஏழ்மையிலும், ஏழ்மையிலான பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் தமிழக அரசு விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் நவம்பர்-2017ல் 10 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 22 கிராம ஊராட்சிகளில் 1,053 பயனாளிகளுக்கும், டிசம்பர் 2017ல் 12 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 12 கிராம ஊராட்சிகளில் 942 பயனாளிகளுக்கும் என மொத்தம் 34 கிராம ஊராட்சிகளில் 1,995 பெண்களுக்கு தலா 4 ஆடுகள் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான பயனாளிகள் தேர்வு அரசு விதிமுறைகளை முழுமையாக பின்பற்றி தகுதி வாய்ந்தவர்களை தேர்வு செய்திட வேண்டும். 02.10.2017 அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு நடைபெறும் கிராமசபைக் கூட்டத்தில் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் ஊராட்சிகளில் பயனாளிகளிடம் விண்ணப்பங்களை பெறவேண்டும். இது குறித்து, தேர்வு செய்யப்பட்டுள்ள கிராம மக்களுக்கு முன்கூட்டியே இத்திட்டத்தின் தகவலினை தெரிவிக்க வேண்டும். இரண்டாவதாக நவம்பர் 2017ல் விலையில்லா ஆடுகள் பெறும் பயனாளிகளுக்கு 11.10.2017 அன்றும், டிசம்பர்-2017ல் விலையில்லா ஆடுகள் பெறும் பயனாளிகளுக்கு 12.10.2017அன்றும், சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட்டு பயனாளிகளின் இறுதிப் பட்டியலை தயார் செய்திட வேண்டும். ஏழ்மையிலும், ஏழ்மையிலான பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையிலான இத்திட்டத்தினை தகுதியான பயனாளிகளை தேர்வு செய்து விலையில்லா ஆடுகளை வழங்கிட அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்கள், கால்நடை உதவி மருத்துவர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் கிராம ஊராட்சி, கிராம ஊராட்சிகளின் தனி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான ஒருங்கிணைப்பாளர்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்க செயலாளர்கள், கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.